අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# சைவநெறி

## வினாத்தாள் I & II



முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 12 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| | |
|---|---|
| **சைவநெறி - I, II** | நேரம் : 3 மணித்தியாலம் |
| **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்** | வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

## சைவநெறி

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர் என்பதனால் பிள்ளையாருக்கு வழங்கப்படும் நாமம்
   (1) விக்கினேஸ்வரன் (2) கணபதி
   (3) ஐங்கரன் (4) விநாயகர்

2. ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தல் எவ் தத்துவத்தினை உணர்த்துகின்றது?
   (1) படைத்தல் (2) மறைத்தல் (3) காத்தல் (4) அருளல்

3. யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளாக விளங்குவன
   (1) மந்திரங்கள் (2) ஆரணியங்கள் (3) பிராமணங்கள் (4) உபநிடதங்கள்

4. "அம்மனை அழைத்தல்" என்ற வரவேற்புப் பூசை சிறப்பாக மேற்கொள்ளப்படும் விரதம்
   (1) வரலட்சுமி விரதம் (2) மார்கழித் திருவாதிரை விரதம்
   (3) கார்த்திகை விரதம் (4) நவராத்திரி விரதம்

5. உயிர்களது மும்மலங்களையும் நீக்குவதனால் திருநீறுக்கு வழங்கப்படும் நாமம்
   (1) விபூதி (2) ஷாரம் (3) இரட்சை (4) பஸ்மம்

6. இறந்தவருக்கு ஆண்டு தோறும் குறித்த திதியில் செய்யப்படும் கிரியை
   (1) மாசிகம் (2) அந்தியேஷ்டி (3) அஸ்தி சஞ்சயனம் (4) திவசம்

7. கொடிச் சீலையை சுற்றியுள்ள கயிறு உணர்த்தும் தத்துவம்
   (1) பதி (2) பசு (3) பாசம் (4) உயிர்

8. "வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்..." என குறிப்பிடும் நூல்
   (1) திருமந்திரம் (2) பெரிய புராணம் (3) திருவாசகம் (4) கந்த புராணம்

9. நாவுக்கரசர் தாம் கண்ட கயிலைக் காட்சியை எப் பதிகத்தில் பாடினார்
   (1) பண்ணினேர் மொழி.... (2) மாதர்ப் பிறைக் கண்ணி....
   (3) ஒன்று கொலாமவர்..... (4) பொன்னார் திருவடிக்கு.....

10. தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் போற்றப்படும் நூல்

(1) கந்த புராணம் (2) உபநிடதம் (3) வேதம் (4) தமிழாகம்

11. குங்கிலியக்கலய நாயனார் இறையருள் பெற்ற நெறி

(1) ஞான நெறி (2) கிரியை நெறி (3) சரியை நெறி (4) யோக நெறி

12. சுபமுகூர்த்த நிர்ணயம் பார்க்காமல் செய்யப்படும் பிரதிஷ்டை

(1) அந்தரிதம் (2) புனராவர்த்தனம் (3) ஆவர்த்தனம் (4) அநாவர்த்தனம்

13. கந்தபுராணத்தில் மீட்சிப்படலம் இடம்பெற்ற காண்டம்

(1) அசுர காண்டம் (2) யுத்த காண்டம் (3) தேவ காண்டம் (4) தட்ச காண்டம்

14. உலகில் தமிழுக்கான முதலாவது பேராசிரியர் என்ற பெருமைக்குரியவர்

(1) சுவாமி விவேகானந்தர் (2) சுவாமி ஞானப்பிரகாசர்

(3) சு.வித்தியானந்தன் (4) சுவாமி விபுலாநந்தர்

15. கந்தனுக்குச் சொற்களால் புனையப்பட்ட அலங்கார மாலையாக விளங்குவது.

(1) கந்தர் அநுபூதி (2) வேல் விருத்தம் (3) கந்தரலங்காரம் (4) மயில் விருத்தம்

16. மனிதப் பிறவிக்குக் காரணமாய் அமைவது

(1)கன்மம் (2) ஆணவம் (3) மாயை (4) இறைவன்

17. திருக்கோயில்களில் நிலையாக தாபிக்கப்படும் இலிங்கம்

(1) சுயம்பு லிங்கம் (2) ஆன்மார்த்தலிங்கம் (3) கண லிங்கம் (4) தாவரலிங்கம்

18. “சாதகன்” என்னும் தகுதிக்கு இட்டுச் செல்லும் தீட்சை

(1) சமய தீட்சை (2) நிர்வாண தீட்சை (3) விசேட தீட்சை (4) சாம்பவ தீட்சை

19. ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலரின் முதலாவது பிரசங்கம் இடம்பெற்ற ஆண்டு?

(1) 1923 (2) 1873 (3) 1888 (4) 1847

20. பொலன்னறுவைக் காலத்தில் “சதுர்வேதி மங்கலம்” எப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டது?

(1) பதவியா (2) மாதோட்டம் (3) கந்தளாய் (4) பொலன்னறுவை

21. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தல விருட்சமாக அமைவது?

(1) வில்வ மரம் (2) வன்னி மரம் (3) ஆல மரம் (4) நொச்சி மரம்

22. ஆறுமுக நாவலரின் கல்விச் சிந்தனையை தேசிய அளவில் நடைமுறைப்படுத்திய சமய நிறுவனம்?

(1) சைவ பரிபாலண சபை (2) அகில இலங்கை இந்து மா மன்றம்

(3) சைவ வித்தியா விருத்திச் சங்கம் (4) அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

23. தானம் பெறுபவர் திருப்தி அடையும் வரை வழங்கக் கூடிய தானம்?

(1) வித்தியா தானம் (2) அன்ன தானம் (3) இரத்த தானம் (4) கண் தானம்

24. சரியை, கிரியை, யோகம் போன்ற நெறிகளில் நின்று பெறும் முத்தி?

(1) பரமுத்தி (2) சாயுச்சியம் (3) சிவன்முத்தி (4) பதமுத்தி

25. ”தென்னவன் பிரமராயன்” என்னும் சிறப்புப் பட்டத்தை உடையவர்?

(1) மாணிக்க வாசகர் (2) சுந்தரமூர்த்தி நாயனார்

(3) திருநாவுக்கரசர் (4) திருஞான சம்பந்தர்

26. தவம், தூய்மை, மன திருப்தி, தெய்வ சிந்தனை, தத்துவ நூல்களைக் கற்று விளங்குதல் என்பன அமையப் பெறுவது?

(1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) சமாதி

27. தாலி கட்டிய பின் மணமகள் அமர வேண்டிய பக்கம்?

(1) வலது பக்கம் (2) பின் பக்கம் (3) இடது பக்கம் (4) முன்பக்கம்

28. பகவத் கீதை என்பது

(1) பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது

(2) கௌதம புத்தரால் உபதேசிக்கப்பட்டது

(3) கடமையை பற்று வைத்து செய்தல் வேண்டும் என கூறுகின்றது.

(4) அர்சுனனால் கிருஷ்ணருக்கு உபதேசிக்கப்பட்டது.

29. பதி புண்ணியம் எனப்படுவது?

(1) புண்ணியம் செய்தல்

(2) மனதில் நல்ல சிந்தனையோடு இருத்தல்

(3) உயிர்களுக்குச் செய்யும் நற்கருமங்கள்

(4) கடவுளுக்கும் கடவுளின் அடியவர்களுக்கும் செய்யும் தொண்டுகள்

30. மூவகை பிரமாணங்கள்?

(1) ஆணவம், கன்மம், மாயை (2) பதி, பசு, பாசம்

(3) பிரத்தியட்சம், அநுமானம், ஆப்தவாக்கியம் (4) கற்பம், விகற்பம், குரோதம்

31. தீபாவளி பண்டிகை

(1) தூய உடைகள் ஞானத்தை உணர்த்துகின்றது.

(2) உத்தரயண காலத்தில் கொண்டாடப்படுவது

(3) கஜமுகாசுரனை வதம் செய்தலோடு தொடர்புடையது

(4) மருத்து நீர் வைத்து நீராடுதல்

32. தாச மார்க்கம் என்பது?

(1) சாதகன் இறைவனை குருவாக பாவனை செய்யும் நெறியாகும்

(2) சாதகன் தன்னை மகனாகவும் இறைவனை தந்தையாகவும் பாவனை செய்யும் நெறியாகும்

(3) சாதகன் தன்னை அடிமையாகவும் இறைவனை ஆண்டானாகவும் பாவனை செய்யும் நெறியாகும்

(4) சாதகன் தன்னை தோழனாக பாவனை செய்யும் நெறியாகும்.

33. வரத பண்டிதர் இயற்றிய நூல்கள் அடங்கும் தொகுதி

(1) சிவபுராணம், பெருங்கதை, திருத்தொண்டர் புராணம்

(2) ஏகாதசி புராணம், சிவராத்திரி புராணம், பிள்ளையார் கதை

(3) மாக்கதை, திருத்தொண்டர் தொகை, பிள்ளையார் கதை

(4) திருத்தொண்டர் புராண சாரம், கோயில் புராணம், பகவத புராணம்.

34. பராபரக் கண்ணி எனும் தோத்திரப் பாடலை பாடியவர்?

(1) குமரகுருபர சுவாமிகள் (2) அபிராமிபட்டர்

(3) நம்மாழ்வார் (4) தாயுமான சுவாமிகள்

35. “சகலாகம பண்டிதர்” எனும் சிறப்புப் பெயர் வழங்கப்பெற்றவர்?

(1) அருணந்தி சிவாச்சாரியார்
(2) மெய்கண்ட தேவர்
(3) உமாபதி சிவாச்சாரியார்
(4) மறைஞான சம்பந்தர்

36. நாகர்களது பிரதான விழிபாட்டுத் தலமாக விளங்கியது?

(1) திருக்கோணேஸ்வரம்
(2) முன்னேஸ்வரம்
(3) திருக்கேதீஸ்வரம்
(4) நகுலேஸ்வரம்

37. “இந்து சாதனம்” என்னும் பத்திரிகையை வெளியிட்ட நிறுவனம்?

(1) விவேகானந்த சபை
(2) சைவ பரிபாலன சபை
(3) சைவ வித்தியா விருத்திச் சங்கம்
(4) கொழும்பு தமிழ்ச் சங்கம்

மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.

| சமயப் பெரியார் | பணிகள் | நூல் |
|---|---|---|
| A - ஆறுமுக நாவலர் | D - பாடசாலைகளை அமைத்தமை | G - மதங்கசூளா மணி |
| B - சுவாமி விபுலானந்தர் | E - சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு உதவியமை | H - சைவ தூசண பரிகாரம் |
| C - மெய்கண்ட தேவர் | F - கஞ்சித் தொட்டி தருமம் | I - சிவஞான போதம் |

38. ஐந்தாம் சமயக் குரவரோடு தொடர்புடைய தொகுதி?

(1) B,F,G (2) C,E,I (3) B,D,G (4) A,F,H

39. சுவேதனப் பெருமானோடு தொடர்புடைய தொகுதி?

(1) C,E,I (2) B,F,I (3) C,E,G (4) B,E,G

40. முத்தமிழ் வித்தகரோடு தொடர்புடைய தொகுதி?

(1) A,D,H (2) B,F,I (3) B,D,G (4) C,E,H

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

**கல்வி அமைச்சு**

| 12 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| | |
|---|---|
| சைவநெறி | நேரம் : 3 மணித்தியாலம் |

**சைவநெறி - II**

**அறிவுறுத்தல்கள்**

* முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக
* முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக**

1. தியானத்தின் இரு வகைகளும் எவை?
2. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
3. பிரதிஸ்டை என்பதன் பொருள் யாது?
4. சுந்தரமூர்த்தி நாயனார் முதலிலும் இறுதியிலும் பாடிய பதிகம் யாது?
5. யோகியர் எனப்படுவோர் யாவர்?
6. திலகவதியார் எவ் மடத்திலிருந்து முத்தி பெற்றார்?
7. அட்டபுஸ்பங்களில் நான்கினை குறிப்பிடுக?
8. ஆன்மாவின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
9. நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகள் நான்கு தருக?
10. விரதங்களை கடைப்பிடிப்பதனால் கிட்டும் பயன்கள் நான்கு எழுதுக?

(10X2=20 புள்ளிகள்)

**2.**

(I) கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக

(அ) மீளா அடிமை உமக்கே.....

(ஆ) அங்கமும் வேதமும் ......

(இ) தந்தது உன் தன்னை......

(ஈ) ஆத்தாளை எங்கள்.......

(உ) பச்சைமா மலை போல்......

(II) மேலே (I) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக

(3+2=5X2=10 புள்ளிகள்)

**3. "சைவசித்தாந்த வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்கள் சந்தான குரவர்களாவர்"**

1. அகச் சந்தான குரவர்களை குறிப்பிடுக.
2. சிவஞான போத நூலின் சிறப்புக்களைத் தருக.
3. உமாபதி சிவாச்சாரியரைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

**4. "ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே**
**பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்**
**ஈர அன்பினர் யாதும் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகையதோ"**

1. இப் பாடல் இடம்பெற்ற நூல் எது? பாடியவர் யார்?
2. இப் பாடலின் பொருளை உமது மொழி நடையில் தருக?
3. உருத்திராக்க மாலை பற்றி சுருக்கமாக விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

**5. "மனித குல மேம்பாட்டுக்கு விழுமியங்கள் உதவுகின்றன"**

1. விழுமியம் என்பதன் பொருள் விளக்கம் யாது?
2. அன்பு, அருள் வேறுபடுத்துக.
3. வாய்மை பற்றி சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

**6. " ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டு**
**மிரு பொருளுங் காட்டா திது "**

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் மலம் யாது?
2. இப்பாடல் சுட்டும் பொருளைத் தருக?
3. வினா (1) இல் குறிப்பிட்ட மலம் பற்றி சுருக்கமாக விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

**7. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக?**

(அ) நல்லூர் கந்தசுவாமி கோயில்

(ஆ) தீபாவளி

(இ) வைரவர் வழிபாடு

(ஈ) காலக் கணிப்பு

(2+3+5=10 புள்ளிகள்)